மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வதைப் போல் அதிகாரிகள் கவனக் குறைவால் இந்த வெடி விபத்து ஏற்படவில்லை என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் அவையில் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(4) கவன ஈர்ப்புகள்.

(அ) சென்னை தியாகராயநகரில் ஏற்பட்ட தீ விபத்துக் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் செ. சிவசாமி, பொ. உத்திராபதி, ஜே. ஜேம்ஸ், பொ. விஜயராகவன், ஏ.ஆர். மாரிமுத்து, ஓ. சோ. வேலுசாமி, சோ. அழகர்சாமி, து. புருடோத்தமன், ஆர்.இ. சந்திரன் ஜெயபால், சின்னசேலம் மா. சுப்பிரமணியம், சேலம் மு. ஆறுமுகம் ஆகியோர் 41வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். திரு. ஜே. ஜேம்ஸ்...

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை தியாகராயநகர் சிவசைலம் தெருவில் 16-3-1979 அன்று ஏற்பட்ட தீ விபத்து பற்றியும் அதனால் விளைந்துள்ள உயிரிழப்பு, சொத்திழப்பு பற்றியுமான அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பி. முசிறிப்புத்தன்: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, 16-3-79 மாலை சுமார் 2.30 மணிக்கு சென்னை தியாகராயநகர் பகுதியைச் சார்ந்த, சிவசைலம் பிள்ளை, மற்றும் சோலையப்ப நாய்க்கன் தெருவில் ஒரு தீ விபத்து நிகழ்ந்தது. விபத்து நடந்த இடத்தில் போடப்பட்டுள்ள குடிசைகள், திரு. கபாலி என்பவருக்குச் சொந்தமானவை. அவர் குடிசைகள் கட்டி வாடகைக்கு விட்டிருந்தார். குடிசைகள் போடப்பட்டுள்ள நிலம், வேறு நபர்களுக்குச் சொந்தமானது. இந்த விபத்து ஒரு குடிசையின் எரியும் அடுப்பிலிருந்து வந்த தீப்பொறியினால் ஏற்பட்டது எனத் தெரிகிறது. தீயணைக்கும் படையினர் உடனே வந்து

1979 ஏப்ரல் 21] [திரு. பி. முசிறிப்புத்தன்]

தீயை அணைத்தனர். இத் தீ விபத்தில் 44 (நாற்பத்து நான்கு) குடியிருப்பு குடிசைகள் எரிந்து சாம்பலாயின. மொத்தப் பொருள் இழப்பு 44,470 ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு குடிசையில் 70 வயதான, திருமதி அமிர்தம்மாள் என்பவர் மூச்சுத் திணறி அந்த இடத்திலேயே இறந்து விட்டார். அவர் கண் தெரியாதவர். அவரை அவருடைய மகள், திருமதி மணியம்மாள் (வயது 35) என்பவர் காப்பாற்றி வந்தார். மாநகராட்சி அதிகாரிகள் இத் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்க இடமும், சாப்பிட உணவுப் பொட்டலங் களும் வழங்கியுள்ளார்கள். 17-3-79 அன்று வருவாய்த்துறை அமைச்சர், மாவட்டாட்சியருடன் பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்த்து. விசாரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார். பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வேட்டி, ஒரு புடவை மற்றும் 5 கிலோ அரிசி வழங்கப் பட்டது.

திரு. சோ. அழகர்சாமி: கொடுத்த விளக்கத்தில் 44 குடிசைகள் எரிந்து விட்டதாகவும் வயதான தாய் இறந்த தாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி இறந்த அந்தத் தாயின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுத்ததாகச் சொல்ல வில்லை. சேதம் ஏற்பட்டு பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு 5 கிலோ அரிசியும் 100 ரூபாயும் கொடுத்திருப்பதாகச் சொன் னார்கள். இது திரும்ப குடிசை கட்டுவதற்குப் போதுமானது அல்ல. தீப் பிடித்து பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு அதிகமான உதவி செய்ய வேண்டும். ஐந்து கிலோ அரிசிக்குப் பதிலாக மற்ற வேளைகளில் 50 கிலோ அரிசி கொடுத்தது போல் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்திற்கும், புயல், வெள்ளம் போன்ற நிலைமைகளால் பாதிக்கப்படுவதற்கும் வேறுபாடு இருக்கிறது. ஏனென்றால் இன்று தனிப்பட்டவர்கள் வீடுகளைக் கட்டி வாடகைக்குக் கொடுத்து அதிலே லாபம் சம்பாதிக்கும் நிலைமை இருக்கும்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பது என்பது எந்த அரசாலும் இயலாத காரியமாகும். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் எதிர்பார்க்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். 5 கிலோவுக்கு மேல் தேவைப்படுகிற அவசியம் இருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவர் அவர் களே, இந்தக் குடிசைகள் எல்லாம் கபாலி என்பவருக்குச் சொந்தம் என்று சொன்னார்கள். கபாலி யார் என்பதைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். இந்த விபத்துக்கள் ஏற்படு கின்றபோது தீயிலே சிக்கி சிலர் இறந்துவிடுகிறார்கள். இறந்

[திரு, சின்னசேலம் மா. சுப்பிரமணி] [1979 ஏப்ரல் 21

தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இனிமேலாவது உதவி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இறந்தவருடைய வருமானத்தைக் கொண்டுதான் அந்தக் குடும்பங்களில் உள்ளவர்கள் பிழைக்கிறார்கள், வாழ்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது என்றால் நிச்சயமாக அதை இந்த அரசு பரிசீலிக்கும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த தியாகராயநகர் பகுதி மட்டும் அல்ல, சென்னைப் பெருநகரில் பல இடங்களிலே இம்மாதிரித் தீவிபத்துக்கள் ஏற்படுகின்றன, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் குடிசைகளை ஒழிப்பதற்கு வீடுகள் கட்டுவதற்கும் ஒருபக்கம் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதே நேரத்திலே வேறு பகுதிகளில் புதிய புதிய குடிசைகள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன, அதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா? அதன்மூலம் தீவிபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்க்குமா? அதோடு புதிய குடிசைகளை ரொம்ப நெருக்கமாகப் போடுவதால் ஒருபகுதி பற்றிக் கொண்டால் மக்கள் வெளியேறுவதற்கு முடியாத நிலைமையில் குறைந்த இடைவெளிதான் இருக்கிறது, 100 ரூபாய் கொடுப்பது என்பது இன்றைக்கு இருக்கிற விலைவாசி நிலைமையில் போதுமா? அதை அதிகரிக்கவேண்டும் 5 கிலோ அரிசி கொடுக்கிறார்கள் அவர்கள் உடைமைகளையும் பொருட்களையும் பணத்தையும் இழந்துவிட்ட நிலையில் நிர்க்கதியாக நிற்கிற நிலைமையில் 5 கிலோ அரிசி போதுமா? தீவிபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுக்காக குறைந்தது 500 ரூபாய் உதவித் தொகையும் இம்மாதிரி புதிய குடிசைகள் ஏற்படுத்துவதால் தீவிபத்துக்கள் ஏற்படுவதால் அதைத் தவிர்க்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முதலிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டதற்கும் அடிப்படை கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்பதால் நான் அதற்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. 100 ரூபாய் போதுமா என்பதிலே இந்தக் கேள்வியோடு அரசும் உடன்பாடான நிலையில் இருக்கிறது. அரிசி கொடுப்பது அவர்களுடைய மறுவாழ்விற்காக இல்லை, பசியைத் தீர்ப்பதற்காக. அது போதவில்லை என்ற நிலைமை இருந்தால் அரசு பரிசீலிக்கும், அவர்கள் உடைமைகளை இழந்து இருந்தால் அரசு பரிசீலிக்கும்.